# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1974/6 - 2016 ජූලි මස 04 වැනි සඳුදා - 2016.07.04

*1974/6 ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் பாரிய குருநாகல் நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டு கருத்திட்டத்தின் கீழ் யந்தம்பலாவ கழிவுநீர் உந்தும் நிலையத்தினை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
“லக்திய மெதுர”,
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2016, யூன் 22.
5/2/1/1223

**அட்டவணை**

குருநாகல் மாவட்டத்தில் குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவில் இல. 832 குருநாகல் நகர் – கங்கொடை கிராம அலுவலர் பிரிவில் வில்கொடை எனும் ஊரில் அமைந்துள்ள கும்பல்கொடுவ வத்தை எனும் காணியின் மொத்த பிரமாணத்திலிருந்து 14 பேர்ச்சஸ் வரையான கீழே விபரிக்கப்பட்டுள்ள எல்லைகளினுள் அமைந்த காணித்துண்டு :-

வடக்கு : புவக் கஸ் சந்தியிலிருந்து யத்தம்பொலாவை வரை இறங்கு வழி (வீதி அதிகார சபை) மற்றும் 543 ஆம் இலக்க உரிமம்பெற்ற அளவையாளரின் வரைபடத்திலுள்ள துண்டு இல. 6 B ;

கிழக்கு : 543 ஆம் இலக்க உரிமம்பெற்ற அளவையாளரின் வரைபடத்திலுள்ள துண்டு இல. 6 B ;

தெற்கு : இக்காணியின் மீதித்துண்டு மற்றும் லீல் ரவீந்திர முனசிங்க உரிமைகோரும் காணி;

மேற்கு : புவக் கஸ் சந்தியிலிருந்து யத்தம்பொலாவை வரை இறங்கு வழி (வீதி அதிகார சபை) மற்றும் இக்காணியின் மீதித்துண்டு.

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: சன்ரீ அட்வடைசிங் சர்விஸ் பிறைவெட் லிமிட்டெட்,
இல. 301, புத்தளம் வீதி,
குருநாகல்.

07 – 810




இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.